கந்தாயத்திற்கு

Pages 1+2 missing

"எங்களுக்கு கொஞ்சம் கொஞ்சம் பூமி கொடுங்கள்? நாங்கள் விவசாயம் செய்து பிழைக்கிறோம்" என்றார்களாம். அதற்கு இந்த பட்டக்கார வம்சத்தினர் "சரி! அதன் படியே உங்களுக்கு பூமி கொடுக்கிறோம் ஆனல் அந்தப் பூமிக்கு வருடா வருஷம் கந்தாயப் பணம் எனக்கு கொடுத்து விடவேண்டும்! அது போக ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒரு ஆள் என் தோட்டத்திற்கு தினசரி வந்து வெட்டி வேலை செய்யவேண்டும் அவர்களுக்கு நான் சம்பளம் கொடுக்க மாட்டேன் என்றாராம். வேட்டுவக்கவுண்டர்கள் அந்த நிபந்தனைக்கு கட்டுப்பட்டு வீட்டுக்கொரு ஆள் பட்டக்காரர் தோட்டத்துக்கு வேலைக்குப் போய் வேலை செய்தார்கள். இவர்களுக்கு மத்தியான ஒரு நேரம் மட்டும் ராகி சோறு அல்லது சோளச் சோறு ஊற்றுவார்கள் பட்டக்காரர் குடும்பத்தில்.

பிறகு, கொஞ்சகாலம் அதாவது இப்பொழுது இருக்கும் நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியாருடைய FF (அப்பாவுட அப்பா) காலத்தில் வேட்டுவக்கவுண்டர்களை யெல்லாம் ஒருவரில்லாமல் விரட்டி வேறு ஊருகளுக்கு துரத்தி விட்டு

இந்தப்பட்டக்காரர் வம்சத்தினரும் வேறு
சில வேளாள கவுண்டர் வம்சத்தினர் ரொம்பவும்
பெருகியதால் இவர்களை பூமிகளை உழுது
கொண்டு பட்டக்காரருக்கு மேற்கண்ட படி
வெட்டி வேலை செய்து வந்தார்களாம். தவிர
அங்குள்ள மூன்று கிராமத்திலும் அதாவது
பழைய கோட்டை, நத்தக்காடையூர், கொங்கரயம்
பாளையம் இந்த மூன்று கிராமத்திலும் உள்ள
கவுண்டர்களிடம் உள்ள பெண் மாடுகள் காளைக்-
கன்று (ஆண் கன்று) போட்டால் அது பட்டக்-
காரருக்கு கொடுத்து விட வேண்டுமாம். எப்படி
யென்றால், ஒரு வருஷத்தில் ஒரு முறை அந்த
மூன்று கிராமத்தில் யார் வீட்டில் (கவுண்டர் வீட்டில்)
மாடு காளைக் கன்று போட்டிருந்தாலும் சரி அவர்
கள் எல்லோரும் வருஷத்தில் குறிப்பிட்ட
நாளில் கன்றுகளை பட்டக்காரர் வீட்டுக்கு
கொண்டு வந்து கன்றுகளை வரிசையாக நிறுத்து
வார்களாம். அப்போது பட்டக்காரர் வந்து
அவைகளை யெல்லாம் வரிசையாக பார்த்து
அவருக்கு விருத்தக் கன்று மேல் இஷ்டப்
பட்டாலும் அந்தக் கன்றுகளை பிடிக்கக் -

கொள்வாரும். அப்படிப்பிடிக்கும் கன்றுகள் ஒவ்வொன்றும் சுமார் 100 ரூபாயிக்கு விலைக்கு விற்குமென்றால். அதில் பாதிவிலை 50 ரூபாய் கன்றின் சொந்தக்காரனுக்கு கொடுப்பாராம் பட்டக்காரர்.

தவிர ஒரு வருஷத்தில் பட்டக்காரர் தோட்டத்தில் சோளம், ராகி, கம்பு இவைகள் வெள்ளாமை வந்த காலத்தில் அந்த தட்டைகளை அறுப்பதற்கு என்று அந்த மூன்று கிராமத்தில் உள்ள கவுண்டர் வீட்டில் இருந்து வெட்டிக்குப் போகும் ஆளுடன் மறுபடியும் இள வெட்டி ஆள் என்று வீட்டுக்கு ஒரு ஆள் அதிகம் போக வேண்டுமாம். இந்த ஆளுகளுக்கும் சம்பளம் கிடையாது. மத்தியானம் ஒரு நேரம் மட்டும் ராகி கஞ்சியோ, அல்லது சோளக்கஞ்சியோ இவர்களுக்கு சாப்பாடாக பட்டக்காரர் குடும்பத்தில் கொடுப்பார்களாம்.

தவிர, பண்டாரங்கள் வெட்டி செய்யும் முறை எப்படி யென்றால். பழைய கோட்டையிலிருக்கும் ஆனூரம்மன் கோவிலில் ஒரு பண்டாரத்திற்கு இரண்டு நாள்

முறை வந்தால் அந்தப்பண்டாரம் முறை வந்த இரண்டு நாளைக்கும் பட்டக்காரர் வீட்டுக்கு தினசரி 60 இலை (சாப்பிடும் இலை)யும், அந்த இரண்டு நாளைக்கும் தேடி பண்டாரம் ஆண்மனை (பட்டக்காரர் ~~வீட்டுக்கு~~ வீட்டுக்கு) வேலைக்குப் போக வேண்டும்! அங்கு இந்தப்பண்டாரம் செய்யும் வேலை பட்டக்காரர் தோட்டத்தில் வேலை பார்க்கும் பண்ணையடிகளுக்கு சமையல் செய்து போட வேண்டும், காலையில் பட்டக்காரர் குளிப்பதற்கு சுடு தண்ணீர் காயவைத்துக் கொடுக்க வேண்டும்! மற்றபடி பட்டக்காரர் சொல்லும் வேலைகளை மேற்படி பண்டாரம் செய்ய வேண்டும். இதற்கு இந்த பண்டாரத்திற்கு சம்பளம் கிடையாது. ஆனால் தினசரி 60 இலை கொடுக்கிறார்கள் அல்லவா அதற்கு ஒரு வருடத்திற்கு ஒரு பொதி (100 வள்ளம்) தானியம் கொடுப்பார்கள். அந்த ஒரு பொதி தானியத்தையும் பழைய கோட்டை கிராமத்தில் இருக்கும் எல்லா பண்டாரங்களும் பங்கிட்டு எடுத்துக் கொள்வார்கள்.

3 மேற்கண்ட படி நத்தக்காடையூர் மாரியம்மன் கோவிலில் ஒரு பண்டாரத்திற்கு 10 நாள் முறை இருந்தால் அந்த 10 நாளைக்கும் அந்தப் பண்டாரம் அரண்மனைக்கு வெட்டி வேலை செய்ய வேண்டும் இவர்களும் அந்த 10 நாளைக்கும் தினசரி 60 இலை அரண்மனைக்கு கொடுக்க வேண்டும். இவர்களுக்கும் ஒரு வருடத்திற்கு ஒரு பொதி தானியம் பட்டக்காரர் வீட்டில் கொடுப்பார்கள். அதை வாங்கி நத்தக்காடையூர் கிராமத்தில் எத்தனை பண்டாரங்கள் இருப்பாங்கள் உண்டோ அவர்கள் எல்லோரும் பங்கு போட்டு வைத்துக் கொள்வார்கள்.

குறிப்பு: பழையகோட்டை அனுசம்மன் கோவிலுக்கு சேர்ந்த பண்டாரங்கள் ஒரு பிரிவு நத்தக்காடையூர் மாரியம்மன் கோவிலுக்கு சேர்ந்த பண்டாரங்கள் மற்றொரு பிரிவு. இந்த கிராமத்து பண்டாரங்களும் தினசரி அரண்மனைக்கு வெட்டி வேலை செய்யப் போக வேண்டும். அதாவது ஒரு கிரமத்திற்கு ஒரு பண்டாரம் போக வேண்டும்.

மற்ற நாட்களில் பட்டக்காரர் வீட்டில் ஏதாவது கல்யாணமென்றாலும், அல்லது இறந்து போன இழவு என்றாலும் பண்டாரங்கள் எல்லோரும் அதாவது ஒரு வீட்டுக்கு ஒரு ஆள் போக வேண்டும். அப்போது பட்டக்காரரே இஷ்டப்பட்டு இவர்களுக்கு சம்பளம் கொடுத்தால் தான் வாங்கவேண்டும்.

பண்டாரங்களே "நாங்கள் வேலை செய்தோமே எங்களுக்கு சம்பளம் கொடுங்கள் என்று பட்டக்காரரை கேட்க முடியாது.

பிறகு, அங்குள்ள நாடார்களும் பட்டக்காரர் வீட்டுக்கு வெட்டிவேலை செய்யப் போகவேண்டும். எப்படியென்றால் ஒரு வருஷத்தில் ~~[illegible]~~ வைகாசி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரை சுமார் 6 மாதங்கள் நாடார் குடும்பங்களில் ஒரு வீட்டுக்கு ஒரு ஆள் பட்டக்காரர் வீட்டுக்கு வேலைக்குப் போக வேண்டும். மேற்கண்ட 6 மாதங்களில் தான் நாடார்கள் அதிகம் பனையேறும் நாள். ஆகையால் அந்தக் காலங்களில் மட்டும் நாடார்கள் பட்டக்காரர் கோட்டத்துக்கு வெட்டிவேலை

செய்யப் போக வேண்டும். அவர்கள் அங்கு போய் செய்யும் வேலைகள் காட்டுக்கு வேலி அடைப்பது, கம்புத்தட்டை பிடுங்குவது, குப்பை எடுத்து தோட்டத்திற்குப் போடுவது, மண் சுமப்பது இது போன்ற வேலைகள் நாடார்கள் செய்வார்களாம். இவர்களுக்கும் தினமும் மத்தியான நேரம் சோளம் அல்லது ராகிக் கஞ்சி கொடுப்பார்கள். இவர்களுக்கும் வேறு சம்பளமென்று ஒன்றும் கிடையாது. தவிர வருஷத்திற்கு ஒரு மணுவு அல்லது மணங்கு (சுமார் ௨௫ Pounds) கருப்பட்டி ஒவ்வொரு நாடார் குடும்பங்களிலிருந்தும் பட்டக்காரர் வீட்டுக்கு கொடுக்க வேண்டும் இதற்கும் பணமில்லை சும்மா தான்.

மற்றபடி அக்கிராமத்தில் உள்ள உடையார்கள் பட்டக்காரர் எப்போது கூப்பிட்டாலும் அங்கு போய் வெட்டி வேலை செய்ய வேண்டும். இவர்களுக்கு குறிப்பிட்ட நாள் வெட்டி வேலை இல்லை உடையார்கள் செய்யும் வேலை பட்டக்காரர்-

வீட்டில் சுவர் இடிந்திருந்தால் அதற்கு சிமெண்ட் பூசுவார்கள். புதிய வீடு கட்ட வேண்டுமென்றால் கட்டுவார்கள். இந்த வேலை செய்யும் நாட்களில் இவருக்கும் சம்பளம் கிடையாது. தவிர, அக்கிராமத்தில் உள்ள உடையார்கள் எல்லோரும் சேர்ந்து பட்டக்காரர் வீட்டுக்கு தேவையான மண்பாத்திரங்கள் எப்போது கேட்டாலும் கொடுக்க வேண்டும். இவர்களுக்கும் ஒரு வருடத்திற்கு ஒரு பொதி தானியம் பட்டக்காரர் கொடுப்பார். அதை அந்தக்-கிராமத்தில் உள்ள உடையார்கள் எல்லாரும் பங்கு போட்டு வைத்துக் கொள்வார்கள்.

அக்கிராமத்தில் உள்ள வண்ணானும் தினசரி ஒரு குடும்பத்துக்காரன் அரண்மனைக்கு சென்று அங்கு சமையல் செய்யும் பண்டாரங்களுக்கு வேஷ்டி கொடுக்கவேண்டும். அவர்கள் உடுத்தியுள்ள அழுக்கு வேஷ்டிகளை துவைத்துக்-கொடுக்க வேண்டும். இவனுக்கும் சம்பளம் கிடையாது. ஆனால், இவனுக்கும் ஒரு

வருஷத்திற்கு ஒரு பொதி தானியம் இருப்பார்கள். அதை கிராமத்தில் எத்தனை வண்ணான் வீடு இருக்கிறதோ அவ்வளவு வீடும் பங்கு போட்டு வைத்துக் கொள்வார்கள்.

மற்றபடி அந்தக் கிராமத்தில் இருக்கும் நாவிதன் அவனவன் பங்குப்பிரகாரம் ஒருவனுக்கு எத்தனை நாள் அரண்மனை வெட்டி வேலை வந்தாலும், அத்தனை நாளும் பட்டக்காரர் வீட்டிலேயே நாவிதன் இருக்கவேண்டும். இவன் அரண்மனையில் செய்யும் வேலைகள் காலையில் எழுந்ததும் பட்டக்காரர் வீட்டு வாசலுக்கு சாணி தெளித்து கூட்டுவான். பிறகு, சமையல் செய்ய விறகு உடைத்துக்கொடுப்பான். மாலை 5 மணிக்கும் வாசல் எல்லாம் கூட்டுவான். இவனுக்கும் சம்பளம் கிடையாது. மூன்று நேரமும் அரண்மனையில் சாப்பாடு போட்டு விடுவார்கள். இந்த நாவிதர்களுக்கும் வருஷத்தில் ஒரு பொதி தானியம் அரண்மனையில் இருப்பார்கள்

அந்த தானியத்தை கிராமத்தில் எத்தனை நாவிதர்கள் குடும்பம் இருக்கிறதோ அவ்வள பங்கு போட்டு வைத்துக் கொள்வார்கள்.

பிறகு, கிராமத்தில் உள்ள இரவர்களும் வீட்டுக்கு ஒரு ஆள் தினமும் எல்லா இரவர்களும் அரண்மனைக்குப் போக வேண்டும்! இவர்கள் அங்கு செய்யும் வேலை. பட்டக்காரர் போகச் சொன்ன பக்கம் போக வேண்டும். யாராவது ஒருவரை பட்டக்காரர் கூட்டிவரச் சொன்னல் அதற்கும் இரவன்தான் போக வேண்டும். தவிர இரவு நேரங்களில் பட்டக்காரர் வீட்டைச் சுற்றிலும் இரவர்கள் காவல் இருக்கவேண்டும். இவர்கள் பட்டக்காரருக்கு கையாள் மாதிரி உள்ளவர்கள். இவர்களுக்கு சில சமயம் பட்டக்காரர் வீட்டில் சாப்பாடு போடுவார்கள். இவர்களுக்கும் சம்பளம் கிடையாது. ஆனல் கிராமத்திலிருக்கும் கவுண்டர்வீடுகளில்

ஒவ்வொரு குடும்பத்திலும் வருஷம் ஒருவள்ளத் தானியம் கம்போ, ராகியோ, சோளமோ ஏதோ ஒன்று கொடுப்பார்கள். அதை வருஷம் ஒரு முறை குரவர்கள் வாங்கி பங்கு போட்டு வைத்துக்-கொள்வர்கள். தவிர, பட்டக்காரர் வீட்டிலும் ஒரு வருஷத்திற்கு ஒருபொதி தானியம் குரவர்களுக்கு கொடுப்பார்கள் அதையும் வாங்கி பங்கு போட்டு வைத்துக் கொள் வார்கள்.

மற்றபடி அக்கிராமத்தில் உள்ள பறையர்கள் தினமும் ஒரு பறையன் பட்டக்காரர் வீட்டுக்குச் சென்று அங்குள்ள குதிரைகளுக்கு தோட்டத்தில் புல் பிடுங்கிப் போட வேண்டும். பட்டக்-காரர் சொன்ன வேலையை செய்ய வேண்டும். இன்று ஒரு வீட்டுப் பறையன் சென்றால் நாளைக்கு வேறு வீட்டுப்பறையன் செல்வான். அவரவர் பங்குப்பிரகாரம் போவார்கள். இவனுக்கு அரண்மனையில் சாப்பாடு போட மாட்டார்கள். சம்பளமும் கிடையாது. ஆனால்

இவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு ஒருபொதி தானியம் பட்டக்காரர் குடுப்பார். அதை வாங்கி கிராமத்தில் எத்தனை பறையர்கள் குடும்பங்கள் இருந்தாலும் பங்கு போட்டு வைத்துக் கொள்வார்கள்.

மற்றபடி அக்கிராமத்தில் உள்ள சக்கிலியர்களை பட்டக்காரர் தோட்டத்தில் வேலையிருந்த போது கூப்பிட்டால், வீட்டுக்-கொரு ஆள் போக வேண்டும். இவர்களுக்கு மத்தியான நேரம் ராகிக் கஞ்சியோ, சோளக் கஞ்சியோ ஏதோ ஒன்று ஊற்றுவார்கள். இவர்களுக்கும் சம்பளம் கிடையாது. வருஷத்தில் ஒரு பொதி தானியமும் குடுக்க மாட்டார்கள்.

மற்றபடி, முதலியார், செட்டியார், ஐயர் இவர்கள் எல்லாம் பட்டக்காரர் ஏதாவது ஒரு நாள் கூப்பிட்டால் போவார்கள். ஏதாவது வேலை சொன்னால் செய்வார்கள். இவர்களுக்கு வெட்டி வேலை யென்பது இல்லை.

குறிப்பு 1, பட்டக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்தால் பழைய கோட்டை பண்டாரங்களுக்கு ஒரு பொதி தானியமும், நத்தக்காரையூர் பண்டாரங்களுக்கு ஒரு பொதி தானியமும் கொடுப்பார்கள். இதை முன் காலத்தில் கம்பு, அல்லது சோளமோ ராகியோ கொடுத்தார்கள். இப்போது அது மாறிவிட்டது. இப்போது நெல் கொடுக்கிறார்கள். பண்டாரங்களைத் தவிர மற்ற ஜாதிகளுக்கு கல்யாணத்திற்கு நெல் கொடுப்பதில்லை.

2. பழைய கோட்டையிலிருக்கும் அதனூரம்மன் பட்டக்காரர் குலதெய்வம். முன்காலத்தில் பட்டக்காரர் வம்சத்தினர் பின்னம் பவுத்திரம் என்ற ஊரிலிருந்து வரும் போது அவர்கள் குலதெய்வத்தையும் உடன் கொண்டு வந்து விட்டார்களாம்.

3. பின்னம்பவுத்திரம் என்ற ஊர் கரூர் பக்கம் இருப்பதாக சொல்கிறார்கள் ஆனால் எனக்குத் தெரியாது.

3, பளையகோட்டையில் முன்காலத்தில்
நடந்த முறைகளுக்கும் இப்போதுள்ள
"நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்" காலத்
திற்கு சில முறைகளை மாறியுள்ளது. அவைகள்
முன்காலத்தில் அக்கிராமத்தில் உள்ள
கவுண்டர்களின் மாடுகள் காளைக்கன்று போட்
டால் அதை பட்டக்காரர் பிடித்துக் கொள்வார்.
ஆனால், இப்போது அந்த மாதிரி காளைக்கன்று
போட்டால் பட்டக்காரர் பிடிப்பதில்லை.

---

மேற்கண்ட பட்டக்காரர் வம்சத்தின் பழக்கம்,
முறைகளை சொன்னவர் என்னுடைய மாமன்
அங்கமுத்து பண்டாரம். அவர் ஊர் கிலாங்
காட்டுவலசு பளைய கோட்டை கிராமம்.

பட்டக்காரர் கன்று பிடிப்பது மாறியகாலம்
இப்போதுள்ள நல்ல சேனாபதி சர்க்கரை
மன்றாடியார் காலத்தில்தான். ஆனால்
அது எதனால் மாறியது என்பது
தெரியவில்லை.

எழுதிய தேதி 8/8/67

K. Sundaram
8/8/67

கேள்வி 9.

பதில் நீங்கள் இந்தக் கேள்வியில் குறிப்பிட்டபடி முன்காலத்தில் கவுண்டர் வீடு கல்யாணங்களில் நாடார், உடையார், பண்டாரம் இவர்கள் மூவரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டி ருக்க மாட்டார்கள். அப்படி கவுண்டர்கள் சாப்பிடும் இடத்தில் பண்டாரங்கள் உட்கார்ந்து சாப்பிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். மற்றபடி உடையார்கள் திண்ணையில் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டு இருப்பார்கள். நாடார்கள் திண்ணையின் பக்கத்தில் வாசலில் உட்கார்ந்து சாப்பிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். மற்றபடி, வண்ணன், நாவிதன், பறையன், சக்கிலியன் இவர்கள் எல்லாம் நான் போனகடிதத்தில் குறிப்பிட்ட இடங்களில் தனித்தனியாக முறைப்படி உட்கார்ந்து சாப்பிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மற்றபடி பிராமணர் வீட்டுக்கல்யாணங்களில் அவர்கள் வீட்டுக்குள் பிராமணரைத் தவிர

வேறு எந்தச் ஜாதியும் உள்ளே உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. மற்றபடி, கோமுட்டி செட்டியார், ஆசாரிகள், கவுண்டர்கள், பண்டாரங்கள், நாடார்கள், உடையார்கள், வண்ணான், நாவிதன் இவர்கள் எல்லோரும் ஐயர் வீட்டுத் திண்ணையிலோ, அல்லது ஆசார வாசலிலோ (Outer hall) உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இவர்களும் எல்லோரும் ஒரே வேளையில் உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள். கவுண்டர்கள், ~~எல்லோரும்~~ ~~ஒரு நேரத்தில் சாப்பிடுவார்~~ ஆசாரிகள், செட்டியார்கள், முதலியார்கள், பண்டாரங்கள் இவர்கள் எல்லாம் ஒரு நேரத்தில் சாப்பிடுவார்கள். உடையார், நாடார் இவர்கள் எல்லோரும் ஒரு நேரத்தில் சாப்பிடுவார்கள். வண்ணான், நாவிதன் இவர்கள் எல்லோரும் ஒரு நேரத்தில் சாப்பிடுவார்கள். மற்றபடி பறையன், சக்கிலியன், குறவன் இவர்களுக்கு பிராமணர் வீட்டில் சாப்பாடு போட மாட்டார்கள். நாய்க்கருக்கு சாப்பாடு போடுவார்கள்.